கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு.எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.5/2025**
அதன்
**அசல் வழக்கு எண்.443/2022**
( CNR No.TNTS 01 001407 2022 )

ஆஸ்பன் . . . மனுதாரர்/வாதி

..எதிர்..

மரிய ஜெகன்நாதன் . . . எதிர்மனுதாரர்/
பிரதிவாதி

இந்த இடைநிலை மனுவானது கடந்த 27.10.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.வெங்கடாச்சலம் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A. கார்த்திக்குமார் அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 18 மற்றும் பிரிவு 151–ன் கீழ், அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்துகொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:–

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், தபசில் சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் பிராதில் தபசில் சொத்துக்களிலிருந்து பிரதிவாதி வருடத்திற்கு ரூ.15,00,000/– லாபம் பெறுவதாக உள்ள சங்கதியை மறுத்துரைத்து எதிர்வழக்குரையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ரூ.4,80,000/– மட்டுமே வருமானம் வருவதாக

குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தபசில் சொத்துக்களிலிருந்து வரவு வருவதை பிரதிவாதியே ஒப்புக்கொண்டுள்ளதால் மேற்படி வருமானத்திலிருந்து இந்த மனுதாரர்/வாதிக்கான மத்தியகால வரும்படியை தர வேண்டிய கடமை எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு உள்ளது. எனவே மத்தியகால வரும்படி கோரும் பரிகாரத்தை பிராதில் சேர்க்க வேண்டியது அவசியம் என்பதால், அசல் வழக்கின் பிராதை மத்தியகால வரும்படி பரிகாரம் சேர்த்து சீர்திருத்தம் செய்ய வேண்டி மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிருரையின் சுருக்கம்**:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. அசல் வழக்கின் பிராதிலேயே மனுதாரர்/வாதியால், தபசில் சொத்துக்களில் தென்னந்தோப்பும், மாந்தோப்பும் உள்ளதாகவும், அவற்றில் உள்ள மரங்களின் மூலமாக பிரதிவாதிக்கு ஆண்டு தோறும் சுமார் 15,00,000/- வருமானம் வருவதாகவும், ஆனால் பிரதிவாதி மேற்படி வருமானம் தொடர்பாக எந்த கணக்கையும் சமர்ப்பிக்கவில்லை என்றும் பிராதில் குறிப்பிட்டுள்ள நிலையில், வாதிக்கு தபசில் சொத்துக்களிலிருந்து வருமானம் வருவது குறித்த சங்கதியானது வாதிக்கு தெரிந்திருந்தும், வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே மத்தியகால வரும்படி பரிகாரம் கோராமல் தற்போது இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்கக் கூடியதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"இம்மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **பிரச்சனைக்கான தீர்வு**:-

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், தபசில் சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கின் பிராதில் தபசில் சொத்துக்களிலிருந்து பிரதிவாதி வருடத்திற்கு ரூ.15,00,000/- லாபம் பெறுவதாக உள்ள சங்கதியை மறுத்துரைத்து எதிர்வழக்குரையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ரூ.4,80,000/- மட்டுமே

வருமானம் வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும்,எனவே தபசில் சொத்துக்களிலிருந்து வரவு வருவதை பிரதிவாதியே ஒப்புக்கொண்டுள்ளதால் மேற்படி வருமானத்திலிருந்து இந்த மனுதாரர்/வாதிக்கான மத்தியகால வரும்படியை தர வேண்டிய கடமை எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு உள்ளதாகவும், எனவே மத்தியகால வரும்படி கோரும் பரிகாரத்தை பிராதில் சேர்க்க வேண்டியது அவசியம் என்பதால், அசல் வழக்கின் பிராதை மத்தியகால வரும்படி பரிகாரம் சேர்த்து சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கின் பிராதிலேயே மனுதாரர்/வாதியால், தபசில் சொத்துக்களில் தென்னந்தோப்பும், மாந்தோப்பும் உள்ளதாகவும், அவற்றில் உள்ள மரங்களின் மூலமாக பிரதிவாதிக்கு ஆண்டு தோறும் சுமார் 15,00,000/- வருமானம் வருவதாகவும், ஆனால் பிரதிவாதி மேற்படி வருமானம் தொடர்பாக எந்த கணக்கையும் சமர்ப்பிக்கவில்லை என்றும் பிராதில் குறிப்பிட்டுள்ள நிலையில், வாதிக்கு தபசில் சொத்துக்களிலிருந்து வருமானம் வருவது குறித்த சங்கதியானது வாதிக்கு தெரிந்திருந்தும், வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே மத்தியகால வரும்படி பரிகாரம் கோராமல் தற்போது இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்கக் கூடியதல்ல என்றும் வாதிடப்பட்டுள்ளது.

8. இரு தரப்பு வாதங்களும், வழக்காவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தனக்கு வருடத்திற்கு ரூ.4,80,000/- வருமானம் வருவதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அதனைப் பொறுத்து இந்த மனுதாரர்/வாதிக்கு மத்தியகால வரும்படி செலுத்த பிரதிவாதி கடமைப்பட்டவர் என்பதால், அசல் வழக்கின் பிராதினை மத்தியகால வரும்படி பரிகாரம் சேர்த்து சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது என்பது மனுதாரர் தரப்பு கூற்றாகும். எதிர்மனுதாரர் தரப்பில் அதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், வாதி பிராது தாக்கல் செய்யும் சமயத்திலேயே எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு தபசில் சொத்துக்களின் மூலம் வருமானம் வருகிற சங்கதி குறித்து பிராதில் குறிப்பிட்டுவிட்டு அந்த விவரம் தெரிந்திருந்தும் பரிகாரம் கோராமல் தற்போது காலதாமதமாக தாக்கல் செய்துள்ளது ஏற்கக் கூடியதல்ல என்று எதிர்வாதம்

செய்யப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர்/பிரதிவாதியே தனது எதிர்வழக்குரையில் தனக்கு வருடத்திற்கு ரூ.4,80,000/- வருமானம் வருவதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அதனைப் பொறுத்து பிராது பரிகாரத்தை மத்தியகால வரும்படி கோரி சீர்திருத்தம் செய்யக்கோரும் மனுதாரரின் மனு ஏற்கக் கூடிய ஒன்று தான் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருந்தபோதிலும் அசல் வழக்கானது விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் காலம் கடந்து மனுதாரர் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி காலதாமதமானது செலவுத்தொகையின்பேரில் ஈடு செய்யப்படுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு இம்மனுவின் செலவுத் தொகையாக ரூ.2,000/-ஐ வருகிற 13.11.2025 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும் தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படு மென்றும் உத்தர விடப்படுகிறது. அழைக்க வாய்தா 13.11.2025.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.11.06 17:05:30 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

இல்லை

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.11.06 17:05:38 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.5/2025
அதன்
அசல் வழக்கு எண்.443/2023
உத்தரவு (நேரிய)
நாள்: 06.11.2025